[2010 ஏப்ரல் 20

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. வேலுசாமி அவர்கள் குறிப்பிடுவதைப்போல அதிகமான பால்வருமேயானால் அதுபோன்ற தொழிற்சாலை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)*

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 219-வது விதியின்கீழ், அவை உரிமையை மீறும் செயல் என்ற முறையில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தது கரும்புக்கு 1014 ரூபாய். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். இரண்டாவது முறை திரும்பவும் அதைப் பதிய வேண்டுமா? வேண்டுமானால், இது குறித்து என்னுடைய தீர்ப்பைச் சொன்னதற்குப் பிறகு, நீங்கள் முடிவெடுக்கலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மிக முக்கியப் பத்திரிகையில் பணிபுரியும் சக பெண் பத்திரிகை ஆசிரியரை, அதே பத்திரிகையில் பணிபுரிகின்ற*

2010 ஏப்ரல் 20] [திரு. தி. வேல்முருகன்]

ஓர் ஊழியர், பாலியல் சம்பந்தப்பட்ட இரட்டை வார்த்தைகளைப் பேசியும், eve teasing என்ற முறையில் ஈடுபட்டும் நடந்ததால் அந்தப் புகார் நம்முடைய நகரக் காவல் துறை ஆணையருக்கு அளிக்கப்பட்டு, புகார் பதிவு செய்யப்பட்டு, இதுவரையில் ஒரு விசாரணைக்குக்கூட அழைக்கப்படாமல், அவர்மீது F.I.R. கூட போடாமல் இருக்கின்ற நிலையால், பெண் பத்திரிகையாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒரு பதற்றத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், இந்த அவையின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன்.

பெண் பத்திரிகையாளர்களின் சார்பாக எனக்கு ஒரு புகார் தந்திருக்கிறார்கள். அதில் அவர்களுக்கு ஏற்பட்ட அவமானங்களையும், eve teasing தொந்தரவுகளையும், பாலியல் தொந்தரவுகளையும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வளவு குறிப்பிட்டு புகார் கொடுத்தும் காவல் துறை ஏன் வழக்குப் பதிவு செய்யவில்லை? சம்பந்தப்பட்டவர்கள்மீது ஏன் விசாரணை நடத்தவில்லை என்பதை இந்த அவைக்கு விளக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் எங்களைக் கட்டாயப்படுத்தாதீர்கள். எங்களுக்கென்று ஒருசில அதிகாரங்கள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது பேசுகிறபோது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ** . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், இது நடவடிக்கைக் குறிப்புகளில் இருக்கிறது. பேரவைச் செயலாளருக்கு இதுகுறித்து அறிவுரை வழங்கியுள்ளேன். அந்த ** என்பது குறித்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) என்னுடைய அறையிலே வந்து பார்த்தீர்கள். நானும் விஷயத்தை உங்களிடம் சொல்லியிருக்கிறேன். திரும்பவும் எதற்கு எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள். செல்வி கே. பாலபாரதி, சொல்லுங்கள்.

முற்பகல் 10-10

(ஆ) துணைக் கேள்விகளுக்கு பிற உறுப்பினர்களையும் அனுமதிக்கக் கோருதல்

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமும், இன்றையதினமும் கேள்வி நேரத்தில் நீங்கள் துணைக் கேள்விகளை அனுமதிப்பதே இல்லை. "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்ற பழமொழிக்கேற்ப, துணைக் கேள்விகள் இல்லாத கேள்வி நேரம் என்பது பயனுள்ளதாகவும் இல்லை, சுவையுள்ளதாகவும் இல்லை. ஆகவே, வரக்கூடிய காலங்களில் துணைக் கேள்விகளைத் தாங்கள் அனுமதிக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தீர்களென்றால், நாங்களும் அதற்கெல்லாம் ஒத்துழைப்புக் கொடுப்போம். நீங்கள் எங்களுக்கு எதிரும் புதிருமாக இருந்தால், நான் என்னுடைய power-ஐக் காண்பித்துவிட்டு அடுத்த subject-க்குப் போய்க்கொண்டே இருப்பேன். அவ்வளவுதான். (குறுக்கீடு) அடுத்து, திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு)

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், திரு. வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே உங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய விதி 55-ன்படி, சட்டமன்றம் கூடுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்பே நாங்கள் நூற்றுக்கணக்கான கவன ஈர்ப்புத் தீர்மானங்களைத் தங்களுக்கு அளித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய*